13 மே 2021

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**கூட்டு ஊடக அறிக்கை: இலங்கையினுடைய மோகான் பீரிஸ் ஐநாவில் சர்வதேச சட்டங்களை உருவாக்க கூடாது.**

**ஜொகானஸ்பேர்க் :** சர்வதேச அமைப்புக்களையும் சட்ட ஆட்சியினையும் சீர்குலைக்கும் ஒரு அதிர்ச்சியளிக்கும் ஒரு முயற்சியாக இலங்கையானது ஐக்கிய நாடுகளின் சர்வதேச சட்ட ஆணையகத்திற்கான[1] தேர்தலுக்கு வேட்பாளர் ஒருவரை முன்மொழிவு செய்துள்ளது. இவர் நாட்டினுடைய பிரதான சட்ட அதிகாரியாக இருந்த அவரது பதவிக் காலத்தில் வலிந்து காணாமற்போதல், படுகொலை, சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வு ஆகியவற்றுடன் தொடர்புபட்ட குற்றவாளிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த தவறியமையால் அவர் தவறிழைத்தவராக உள்ளார். மோகான் பீரிஸ் தற்போது நியோர்க்கில் ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக உள்ளார் ஆனால் 2008 – 11 வரை இலங்கையினுடைய சட்டமா அதிபராக கடமையாற்றியுள்ளதுடன் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரணை செய்வதற்கு அல்லது வழக்குத் தொடர்வதற்கு தவறியிருக்கிறார். 2013 இல் அவரது முன்னோடியான, சிரானி பண்டாரநாயக்காவின் சட்டத்திற்கு முரணான அரசாங்கத்தின் பதவிநீக்கம் குறித்து உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கண்டனங்களுக்கு மத்தியில் தலைமை நீதிபதிப் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார். இந்தப் பதவி நீக்கத்தினை ஐநா மனித உரிமைகள் குழு நீதித்துறை சுதந்திரம் மீதான ஒரு தாக்குதல் என தெரிவித்தது அத்துடன் இலங்கையின் உச்ச நீதிமன்றம் இது சட்டத்திற்கு முரணானது[2] என தீர்ப்பழித்தது.

*''ஐநாவினுடைய சர்வதேச சட்ட ஆணையகமானது தண்டனையிலிருந்து பாதுகாப்பு, நாடுகடத்தல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற விடயங்களில் தனது அண்மைய சில வேலைகளுடன் சர்வதேச சட்டங்களை முறைப்படுத்துகின்றது. அனைத்துச் சட்டவாளர்கள் மற்றும் நியாயமான உலக ஒழுங்கினைப் பற்றி அக்கறை கொண்டவர்கள் அனைவரும் இந்த மனிதருக்காக வாக்குப் போட வேண்டாம் என ஐநா பொதுச் சபையின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும்''* என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

---

1 https://legal.un.org/ilc/elections/2021election.shtml
2 https://uk.reuters.com/article/instant-article/idUSBRE90209D20130103

*"பீரிஸினுடைய அவதானிப்பின் கீழ் மோசமான சர்வதேசக் குற்றங்கள் இலங்கைப் பதுகாப்பு படைகளால் புரியப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்காக எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. நியோர்க்கிலுள்ள ஐநாவில் அவர் இலங்கையினுடைய உயரிய இராஜதந்திரியாக நியமிக்கப்பட்டமையானது இலங்கை பொறுப்புக்கூறலை புறக்கணிப்பது தொடர்பான ஒரு மோசமான சமிக்ஞையை ஏற்கனவே சர்வதேச சமூகத்திற்க அனுப்பியது. அத்துடன் நீதியை இன்னமும் பெற்றுக்கொள்ளாத ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்களின் முகத்தில் விழுந்த ஒரு அடியாக இருந்தது."* என அவர் மேலும் தெரிவித்தார்.

*"இந்த மனிதர் தலைமைதாங்கிய காலப் பகுதியில் இலங்கையில் பத்திரிகையாளர்கள் தமது பணியைச் செய்தமைக்காக கடத்தப்பட்டு, காணாமற்போய், படுகொலை செயயப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டார்கள். அவரது மற்றும் அவரது அரசாங்கத்தினது பதிவுகளை வெள்ளையடிக்க உதவும் இந்த வேலைக்கான அவரது நியமனத்திற்கு எதிராக எங்களுடன் உலகம் முழுவதிலுமுள்ள ஊடக உரிமைகள் குழுக்கள் ஒன்றாக நிற்கவேண்டும்."* என இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்களுக்கான ஜனநாயகம் என்ற அமைப்பைச் சேர்ந்த பாசனா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

*"இலங்கை அரசாங்கத்தால் புரியப்பட்ட பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக சர்வதேச சட்டத் தலையீட்டை கோரும் நம்பத்தகுந்த ஆதாரங்களை அம்பலமாக்கியவர்கள் பத்திரிகைளாயர்கள். சர்வதேச சட்டத்தை தீர்மானிக்கும் ஒரு உலகளாவிய அமைப்பிற்கு பத்திரிகையாளர்களுக்கு நீதியை மறுத்த ஒருவரை நியமித்தல் ஒரு கோழிக்கூட்டை ஒரு குள்ளநரியிடம் ஒப்படைப்பதற்கு ஒப்பானதாக இருக்கும்,"* என திரு அபயவர்த்தனா மேலும் தெரிவித்தார்.

## பின்னணிக் குறிப்புக்கள்

**போர்க் குற்றங்கள்**

சிவில்ப் போரின் இறுதிக் கட்டத்தின் போது சட்ட மா அதிபரான மோகான் பீரிஸ் ஜனாதிபதியினதும் அரச பாதுகாப்பு படைகள் மற்றும் பொலிஸ்[3] உட்பட அனைத்து அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளுக்கு பிரதான சட்ட ஆலோசகராக இருந்தார். பொலிஸ் விசாரணையாளர்களை நேரடியாக வழிநடத்தும் மற்றும் ஆலோசனை வழங்குவதற்கான அதிகாரத்தினையும் பொறுப்பினையும் அத்துடன் குற்றச்சாட்டு மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான வழக்குகளைச் சரியானமுறையில் தயார்ப்படுத்துவதற்கான அதிகாரத்தினையும் பொறுப்பினையும் கொண்டிருந்தார். சட்ட மா அதிபர் என்ற வகையில் பொதுமக்களின் இலக்குகள் மீதான தாக்குதல்கள், பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை மறுத்தல் , அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட வலிந்து காணாமற் போதல்கள், கூட்டான படுகொலைகள், பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதை போன்ற அந்த நேரத்தில் அறிவிக்கப்பட்ட பல்லேறு வகையான போர்க்குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அவர் சுயாதீனமான முறையிலும் நம்பத்தகுந்த விதத்திலும் விசாரணை செய்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

**பாரியளவான பாரபட்சமற்ற தடுத்துவைப்பு**

சட்ட மா அதிபர் என்ற வகையில் பீரிஸ் "சட்ட வெற்றிடத்தில்"[4] இயங்குவதாக சர்வதேச நீதிபதிகள் குழுவினால் அந்த நேரத்தில் விபரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகளுக்கான அரசாங்கத்தினுடைய "புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தில்" இருந்த மோசமான சட்ட ரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தவறியமைக்காக *சர்வதேச நீதிபதிகள் குழுவினால்* (ICJ) விமர்சிக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்ச்சித் திட்டமானது அந்த நேரத்தில் உலகிலேயே எங்கும் இல்லாத மிகவும் பாரிய நிர்வாக தடுத்து வைப்பு என சர்வதேச நீதிபதிகள் குழுவினால்[5]

---

[3] International Independent Group of Eminent Persons (IIGEP) report to donors, Page 7.

[4] Page 7 on legal vacuum.
In its September 2010 report the International Commission of Jurists (ICJ) says the establishment of the legal framework underpinning surrender, rehabilitation and reintegration of ex-combatants was the responsibility of the Attorney General. It cites a 2009 document outlining a legal framework from the AG to the Commissioner General of Rehabilitation on this issue but said it had no legal status and could not be considered a legally binding framework (footnote 40, Page 14).https://www.refworld.org/pdfid/4ca0ae592.pdf

[5] Page 5, ICJ report.

விபரிக்கப்பட்டது. அரசாங்கத்தின் சட்ட ரீதியான கட்டமைப்பினை கோடிட்டுக்காட்டும் கொள்கை ஆவண வரைபிற்கு பீரிஸ் பொறுப்பாகவும் இருந்தார், இந்த கொள்கை ஆவணமானது பல மோசமான மனித உரிமைகள் பற்றிய கரிசனையை எழுப்பியதாக சர்வதேச நீதிபதிகள் குழு சுட்டிக்காட்டியது, இது ,கட்டாயமான மற்றும் தன்னிச்சையற்ற முறையிலான புனர்வாழ்வு இது புனர்வாழ்வு அளிக்கப்படுபவர்களின் சுதந்திரத்தினை பறிமுதல் செய்தலுடன் தொடர்புபட்டது, அத்துடன் இது குற்றவியல் தீர்ப்பற்ற தனிப்பட்ட மற்றும் கூட்டுத்தண்டனைக்கு ஒப்பானதாக இருக்கும் என இந்த சர்வதேச நீதிபதிகள் குழுவானது தெரிவித்தது, தடுத்து வைப்பு மற்றும் புனர்வாழ்விற்கு சவால்விடும் உரிமை மறுக்கப்படல், அத்துடன் குற்றச்சாட்டு அல்லது வழக்கு அல்லது சட்டப் பிரதிநிதித்துவத்திற்கான அனுமதி இல்லாமல் இரண்டு ஆண்டுகள் வரையான தடுத்துவைப்புக் காலப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது ( சரணடைந்தவர்களுக்கான முகாம்களில் ஏற்கனவே கழித்த காலம் புனர்வாழ்வின் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றதா என்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லாமல்).[6] புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில் சித்திரவதையென்பது பொதுவானதாக இருந்ததாக வெளிவந்த வாக்குமூலம் காட்டுகின்றது. செப்டெம்பர் 2010 இன் சர்வதேச நீதிபதிகள் குழுவின் அறிக்கையானது அப்போது தடுத்து வைக்கப்பட்டிருந்த 8000 பேருக்கான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டதிலுள்ள சட்ட ரீதியான பிரச்சினைகள் பற்றி எச்சரிக்கை செய்திருந்தது. தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு உரிய செயல்முறை மற்றும் நியாயமான வழக்கிற்கான உரிமைகள் பறிக்கப்பட்டது – அல்லது சர்வதேச நீதிபதிகள் குழு தெரிவித்தது போல் தடுத்து வைக்கப்பட்டவர்கள் "ஒரு சட்ட கருந்துளையினுள்" [7]இருந்தார்கள். இதனைவிட , இந்த முகாம்கள் இராணுவ அணிகளினால் நிர்வகிக்கப்பட்டன இந்த அணிகள் இப்போது தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு எதிரான முனைப்பான சண்டையில் ஈடுபட்டிருந்தன, இது மீறல்கள் இடம்பெறுவதை முற்றிலும் சாத்தியமாக்கியது. தடுத்து வைக்கும் அதிகாரங்கள் போன்றவற்றை பாவிப்பதற்கான எந்தவொரு சுயாதீனமான கட்டுப்பாடுகள் அல்லது விதிகள் நீதி மன்றங்களால் மீள்பார்வை செய்யப்படுதல் தொடர்ச்சியாகப் போதாமல் இருத்தல் துஸ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான ஆபத்தினை பெருமளவில் அதிகரிக்கச் செய்தது[8].

**போர்க் குற்றங்களை மறுத்தல்**

பீரிஸ் கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகளால் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட குற்றங்களை மறுத்து ஐநா அமைப்புகளில் இலங்கை அரசாங்கத்தின் பதிவினைப் பாதுகாத்து வாதிட்டுள்ளார்.முன்னாள் வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் தெரிவிக்கையில்:

*" சித்திரவதைக்கு எதிரான குழுவின் பதிவுகள் கூட , திரு மொகான் பீரிஸ் அதற்கு முன்னால் பொய்கள் கூறினார் என்ற உண்மைக்கான சாட்சியத்தைக் கொண்டிருக்கும். இது சர்வதேச அரங்கில் உள்ளது அத்துடன் அதற்குப் பின்னர் அதன் உறுப்பினர்களில் ஒருவரால் 'பொய்யன்' என அழைக்கப்பட்டார். இலங்கையினுடைய தலைமை நீதிபதி ஒரு பொய்யன் என அதன் உறுப்பினர்களில் ஒருவரால் பகிரங்கமாகவே அழைக்கப்பட்டார். இது ஒரு சிறந்த நீதித்துறை ஊழலாக இருந்தது. மோகான் பீரிஸ் எந்தவித சந்தேகத்திற்கு இடமில்லாமல் மோசமான மனித உரிமைகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் புரிவதாக குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகபூர்வ பொறிமுறையின் அழுகிய மையமாக இருந்தார்"[9].*

**2011, சித்திரவதைக்கு எதிரான ஐநாவின் குழு (UNCAT)**

நவம்பர் 2011 இல் சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கான இலங்கையின் தூதுக்குழுவானது மொகான் பீரிசினால் தலைமை தாங்கப்பட்டது. செப்டெம்பர் 2011 இல் சட்ட மா அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் இது இடம்பெற்றது ஆனால் அவர் அப்போதும் அமைச்சரவைக்கான சட்ட ஆலோசகராக இருந்தார்[10]. இலங்கையில் இரகசிய தடுப்பு முகாம்கள் இருப்பது பற்றியும் பீரிஸ் சட்ட மாஅதிபராக இருந்த காலப் பகுதியில் தடுப்புக் காவலில் சித்திரவதை இடம்பெறுவதற்கு எதிரான பயனுள்ள உத்தரவாதங்கள் போதாமல் இருப்பது குறித்தும் ஐநா நிபுணர்களின் கேள்விகள் இருந்தன. வலிந்து காணாமற்போதல்கள் , சாட்சியங்களாக ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான அச்சுறுத்தல்கள் பற்றிய விடயங்களை ஐநா நிபுணர்கள் எழுப்பியிருந்தார்கள்.

---

[6] https://www.icj.org/wp-content/uploads/2012/06/Sri-Lanka-mass-detention-LTTE-analysis-brief-2010.pdf

[7] Page 6.ICJ Report.

[8] https://www.icj.org/wp-content/uploads/2012/06/Sri-Lanka-mass-detention-LTTE-analysis-brief-2010.pdf

[9] https://mfa.gov.lk/foreign-minister-speaks-in-parliament-on-removal-of-mohan-peiris-from-cjs-office-2/
Hansard: https://www.parliament.lk/uploads/documents/hansard/1423457395025390.pdf

[10] http://archives.dailynews.lk/2011/09/01/news60.asp, 1 SEPTEMBER 2011, Daily News Lanka. New post for former AG.

இலங்கை அரசாங்கத்தினுடைய பதில் "மழுப்பாலானதாக" இருந்தது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (AHRC) குறிப்பிட்டிருந்தது.[11] பாதுகாப்பமைச்சின் இணையத் தளமானது குறிப்பிட்ட சில வழக்கறிஞர்களை துரோகிகள் என கண்டிப்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது இந்த பிரசுரிப்பால் எந்தக் பாதிப்பும் இல்லை என மோகான் பீரிஸ் அந்தக் குழுவின் முன்னால் தெரிவித்தார். மனித உரிமைகள் சட்டவாளர் ஜே.சி வெலியமுனவின் வீட்டின் மீதான கைக்குண்டுத் தாக்குதல் பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பாதிக்கப்பட்டவர் அந்தக் குண்டை எறிந்தவர் யாரெனக் கூறமுடியாமல் இருப்பதால் குற்றவாளியை அடையாளங்காண்பது சாத்தியமில்லை எனப் பதிலளித்தார்.[12]

**பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொட**

சிங்கள கேலிச் சித்திரக்கலைஞரான பிரகீத் எக்னெலிகொட காணாமற்போனமை தொடர்பான வழக்கு இலங்கையில் அடையாள வழக்குகளில் ஒன்றாக உள்ளது. அவர் 24 ஜனவரி 2010 இல் இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தனது அலுவலகத்தை விட்டுப் புறப்பட்ட பின்னர் காணாமற்போனார். ஏக்னெலிகொடவின் மனைவியான *சந்தியா "அரசாங்கத்தை தனது கணவர் விமர்சித்தமையால் அரசாங்கத்தின் கட்டளையின் பேரில் அவர் கடத்தப்பட்டதாக"* தான் நம்புவதாக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார[13]. அவர் ஒரு ஆட்கொணர்வு மனுவினைத் தாக்கல் செய்தார்.

ஜெனிவாவில் இடம்பெற்ற சித்திரவதைக்கு எதிரான ஐநா குழுவின் அமர்வில் எக்னெலிகொடவிற்கு என்ன நடந்தது என இலங்கை அரசாங்கத்திடம் கேட்கப்பட்டது. 2011 இல் அரசாங்கம் வழங்கிய எழுத்து மூலமான பதில்களில் காணாமற்போனமை பற்றி பொலிசார் விசாரணை செய்துவருவதாக அது தெரிவித்திருந்தது.[14] ஆனால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கணாமற்போதல் சம்பவம் என்பது ஒரு புரளி என சித்திரவதைக்கு எதிரான ஐநாவின் குழு மோகான் பீரிஸிடம் கேள்வி கேட்ட போது தெரிவித்தார்:

*"…எம்மிடமுள்ள தற்போதைய தகவலின்படி…. திரு எக்னெலிகொட இருக்கிறார்…அவர் வெளிநாடொன்றில் புகலிடம் கேட்டுள்ளார் … அது பற்றி எங்களுக்கு ஓரளவு உறுதியாக தெரியும்."[15]*

2017 இல் அமெரிக்க அரசாங்கத்தால் "துணிச்சலான பெண்ணாக"[16] அங்கீகரிக்கப்பட்ட சந்தியா எக்னெலிகொடவிடம் இது பற்றி கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:

*"பீரிஸினால் தெரிவிக்கப்பட்டது போல் என்னுடைய கணவர் தலைமறைவாக இருந்தால் அவர் ஒரு போதும் என்னைத் தொடர்பு கொள்ளாமல் இருக்கமாட்டார். அவர் எங்களுடைய பிள்ளைகளில் அன்பு கொண்டவர் அத்துடன் எங்களை இது போன்ற வேதனைக்கு உட்படுத்தமாட்டார். என்னுடைய கணவர் எங்குள்ளார் என தனக்குத் தெரியும் என மோகான் பீரிஸ் கூறுகின்றார். அவர் சொல்வது உண்மையென்றால் எனது கணவரை என்னிடம் கொண்டுவர வேண்டும் என விரும்புகின்றேன்."[17]*

இந்தக் கூற்று இலங்கையினுடைய ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியதுடன் , சந்தியா எக்னெலிகொட சித்திரவதைக்கு எதிரான

---

11 https://www.omct.org/files/2011/12/21543/omctcat_eng2.pdf accessed Nov. 13, 2020.

12 https://reliefweb.int/report/sri-lanka/reality-there-may-be-torture-our-law-against-torture-fine accessed Nov. 13, 2020.
§13, CAT/C/LKA/CO/3-4, *Consideration of reports submitted by States parties under article 19 of the Convention Concluding observations of the Committee against Torture,* 8 Dec. 2011.
https://tbinternet.ohchr.org/_layouts/15/treatybodyexternal/Download.aspx?symbolno=CAT%2fC%2fLKA%2fCO%2f3-4&Lang=en

13 https://cpj.org/2011/11/sri-lankas-savage-smokescreen/

14 "117. An investigation into the abduction of Prageeth Ekneligoda is being conducted by the Homagama Police and by the CCD. Facts have been reported to the Magistrate's court of Homagama under case No: B/7417/10. Investigation is being continued. So far no one has been arrested in this connection. Further progress reports will be filed in Court on 24 October 2011". https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G16/121/63/PDF/G1612163.pdf?OpenElement List of issues in relation to the third and fourth periodic report of Sri Lanka.
https://tbinternet.ohchr.org/_layouts/15/treatybodyexternal/Download.aspx?symbolno=CAT%2fC%2fLKA%2fQ%2f3-4%2fAdd.1&Lang=en
Addendum, Replies of Sri Lanka to the list of issues, received October 2021.

15 Transcript on file.
Also https://cpj.org/2011/11/sri-lankas-savage-smokescreen/ accessed Nov. 13, 2020 and http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-STM-171-2011/

16 https://www.dailynews.lk/2017/03/29/local/111890/sandya-eknaligoda-recipient-international-women-courage-award

17 https://cpj.org/2011/11/sri-lankas-savage-smokescreen/

ஐநாவின் குழுவின் செயலாளரான ஜோவா நட்டவ் இற்கு கடிதம் ஒன்றையும் எழுதச் செய்தது அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

“இந்த தகவல்களில் எதனையும் எனக்கோ , என்னுடைய பிள்ளைகளுக்கோ மற்றும் இலங்கை நீதிமன்றங்களுக்கோ வழங்காமையினாலும் அத்துடன் இந்த உண்மைகளை எங்களுக்கு மறைத்துள்ளமையினாலும் திரு மோகான் பீரிஸினால் உங்களது குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட அறிக்கையானது ஒரு பொறுப்பற்ற ஏமாற்று நடவடிக்கை என நான் நம்புகின்றேன்.”[18]

2013 இல் சர்வதேச மன்னிப்புச் சபையானது *கருத்துமுரண்பாடு மீதான இலங்கையின் தாக்குதல்* என்ற அதனுடைய வெளியீட்டில் அழைப்பாணைகளுக்கான மேன்முறையீடு பலனளிக்காத நிலையில் 2012 இல் நீதவான் நீதிமன்றத்தில் அவரது அறிக்கை தொடர்பாக சாட்சியமளிப்பதற்கு பீரிஸ் எவ்வாறு அழைக்கப்பட்டார் என்பதை விபரிக்கின்றது.[19] அவர் நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர் நீதிமன்றத்திற்கு தெரிவித்ததாக கூறப்படுவதாவது:

*“அவர் உயிருடன் உள்ளாரா அல்லது இறந்து விட்டாரா என்று எனக்குத் தெரியாது, அவரைப் பற்றி எனக்கு கிடைத்த தகவல் உண்மையானதா என்பது கடவுளுக்கு மாத்திரம் தான் தெரியும். அவர் எங்கு வசிக்கிறார் என்பது பற்றி அரசாங்கத்திற்கு கூட தெரியும் என நான் நினைக்கவில்லை, அத்துடன் பிரகீத் வெளநாட்டுக்குச் சென்று வசிக்கிறார் என்று நான் எங்கிருந்து அறிந்து கொண்டேன் என்பது எனக்கு நினைவில்லலை எனவும் அவர் தெரிவித்தார்.”*[20]

**பத்திரிகையாளர் ஜே எஸ் திசாநாயகம்**

தமிழ்ப் பத்திரிகையாளராக ஜே எஸ் திசாநாயகம்[21] பற்றிய வழக்கும் பெயர்போன இன்னுமொரு வழக்காகும். இவருக்கு துணிச்சலான மற்றும் நெறிமுறையான பத்திரிகைத் துறைக்கான பீற்றர் மக்லேலர் விருது வழங்கப்பட்டது.[22] மார்ச் 2008 இல் திசாநாயகம் கைது செய்யப்பட்டார் அத்துடன் அவர் ஆசிரியராக இருந்த *வடகிழக்கு மாதாந்தம்* என்ற சஞ்சிகையில் 2006 ஆம் ஆண்டு இரண்டு கட்டுரைகளை எழுதியதன் ஊடாக இன ரீதியான பதற்றத்தை தூண்டியதாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார். இந்தச் சஞ்சிகையின் வெளியீட்டாளர் வி.ஜசிகரன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோரும் தன்னிச்சையான முறையில் தடுத்து வைக்கப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டார்கள் ஆயினும் ஒக்டோபர் 2009 இல் குற்றஞ்சாட்டப்படாமல் விடுவிக்கப்பட்டார்கள். போர் நிறுத்தம் அமுலில் இருந்த போது மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்த போது 2006 இல் திசாநாயகம் இந்தக் கட்டுரைகளை எழுதினார். சட்டரீதியாக 2006 ஆம் ஆண்டு அவர் எழுதிய ஒரு கட்டுரைக்காக 2008 ஆம் ஆண்டு அந்த பத்திரிகையாளரை குற்றஞ்சுமத்துவது சட்டத்திற்குப் புறம்பான வகையில் அந்தச் சட்டத்தை பின்னோக்கிப் பாவிப்பதாக இருந்தது. ஐந்து மாதங்களாக பாரபட்சமின்றி தடுத்து வைக்கப்பட்ட பின்னர் , பலவந்தமாகப் பெறப்பட்ட வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு சட்ட மா அதிபரினால் இந்தக் குற்றச்சாட்டு வழங்கப்பட்டது. *“பொலிசாரினால் உளவியல் ரீதியாக சித்திரவதை செய்யப்பட்டார் எனவும் இந்த வாக்குமூலம் பலவந்தமாகப் பெறப்பட்டது”*[23] என்பதையும் திசாநாயகம் தொடர்ந்தும் கூறிவருகின்றார் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இவ்வாறு இருப்பினும் கொழும்பு உயர் நீதி மன்றம் இந்த வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளத்தக்கது என ஏற்றுக் கொண்டு இந்தப் பத்திரிகையாளருக்கு 20 வருட கால

---

[18] https://www.scoop.co.nz/stories/WO1112/S00158/sri-lanka-letter-to-un-cat-over-mohan-peiris-claim.htm accessed Nov. 13, 2020

[19] https://www.bbc.co.uk/news/world-south-asia-18332987
“Under cross-examination, he said he could not recall which government department gave him the information that Mr Ekneligoda was alive”.

[20] https://www.scoop.co.nz/stories/WO1112/S00158/sri-lanka-letter-to-un-cat-over-mohan-peiris-claim.htm accessed Nov. 13, 2020,“Peiris had told the U.N. Committee Against Torture that Eknelygoda took refuge in a foreign country and that the campaign to solve his disappearance is a hoax–although he failed, then and ever since, to provide information about where Eknelygoda has supposedly fled. The government’s attorney, appearing before the magistrate, argued that because Peiris had been speaking on behalf of the government at the U.N., he cannot be held responsible for his remarks and need not appear in court. The attorney said officials are not required to disclose communications where “the public interest would suffer,” according to a person monitoring the court’s hearings”.
https://cpj.org/2013/01/in-sri-lanka-justice-for-eknelygoda-is-a-waiting-g/

[21] https://www.amnestyusa.org/files/asa370032013en.pdf accessed Nov. 13, 2020

[22] https://rsf.org/en/news/j-s-tissainayagam-named-first-winner-peter-mackler-award-courageous-and-ethical-journalism
https://blog.amnestyusa.org/asia/obama-salutes-tissainayagam/

[23] Ibid.

சிறைத்தண்டனையை விதித்தது. சர்வதேச அழுத்தம் காரணமாக ராஜபக்கவினால் 2010 இல் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது அத்துடன் அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றார்.

திசாநாயகம் பாரபட்சமான முறையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட போது சட்ட மா அதிபராக இருந்த பீரிஸ் பிணை மறுப்பதில் முக்கிய காரணகர்த்தாவாக இருந்ததுடன் பலவந்தமாகப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையாக கொண்டு குற்றச்சாட்டினை உருவாக்குவதற்கும் பொறுப்பாக இருந்தார் எனக் கூறப்படுகின்றது.

ஐநாவின் சித்திரவதைக்கு எதிரான குழுவின் அமர்வின் போது பீரிஸ் பத்திரிகையாளரின் கைது , தடுத்து வைப்பு மற்றும் தண்டனை வழங்கியமை குறித்து அரசாங்கம் நடந்துகொண்ட வித்திற்கு ஆதரவாகப் பேசினார். திசாநாயகம் ராஜபக்சவிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் தனது நடவடிக்கைகளுக்காக ஆழ்ந்த “மனவருத்தத்தை” வெளியிட்டிருந்தார் என பீரஸ் கூறினார். *“அவர் குற்றங்காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது ஆனால் தனது சட்டவாளர்கள் ஊடாக அனுப்பப்பட்ட அவருடைய கடிதத்தின் மூலம் அவர் செய்தவற்றுக்கு அவர் உடந்தையாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது* என்று அவர் தெரிவித்தார். *அவர் ஒரு மன்னிப்பை பெற்றுக் கொண்டார்.”* சித்திரவதைக்கு எதிரான ஐநா குழுவிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் திசாநாயகம் இதனைக் கடுமையாக மறுத்துள்ளார், அத்துடன் இந்தக் கடிதம் சட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்கு உடந்தையாக இருத்தல் அல்லது மனவருத்தம் வெளியிட்டமை ஆகியவற்றை மறுத்தது:

*“சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் உடந்தையாக இருந்தேன் என்பதை நான் ஏற்றுக்கொண்டதாக கூறும் எந்த கூற்றும் முற்றிலும் தவறானது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”*

பொதுமன்னிப்பினைப் பெற்றுக் கொள்வதற்காக அவர் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியதாகவும் ஆனால் தான் எழுதியது எவருக்காவது தனிப்பட்ட ரீதியில் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்கு மட்டும் மன்னிப்புக் கேட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார், அத்துடன் மேலும் தெரிவிக்கையில்:

*“ஜனாதிபதியையோ அல்லது இலங்கை அரசாங்கத்தையோ தர்மசங்கடத்திற்கு உட்படுத்தல் ஒரு குற்றம் என்பதை நான் அறிந்திருக்கவில்லை அத்துடன் நான் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றம் அதுவல்ல.”*[24]

**முற்றும்**

[24] http://jdsrilanka.blogspot.com/2011/11/tissainayagam-denies-former-attorney.html accessed Nov. 13, 2020

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT